EMBASSY OF JAPAN

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
Tel : +94-11-2693831~3, Fax : +94-11-2698629
E-mail : cultujpn@sltnet.lk

*ஊடக வெளியீடு* மார்ச் 10, 2011

# திருகோணமலை, இரத்தினபுரி பிரதேச வாழ்வாதார திட்டங்களுக்கு ஜப்பான் 18 மில்லியன் நிதியுதவி

திருகோணமலை மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களில் இரண்டு வாழ்வாதார திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் சுமார் 18 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்ற செயற்திட்டத்தை இலங்கை சமூக நடவடிக்கைகள் அபிவிருத்தி சங்கம் அமுல்படுத்தியுள்ளது. சுமார் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குளம், 4 விவசாயக் கிணறுகள் மற்றும் மீன்பிடி நிலையமொன்று புனரமைக்கப்படவுள்ளதுடன் விவசாய, மீன்பிடி உபகரணங்கள் மற்றும் விதை, செடிகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 1520 குடும்பங்கள் நேரடியாகவும் 3500 குடும்பங்கள் மறைமுகமாகவும் பயனடையவுள்ளனர்.

பெருந்தோட்ட மக்களின் சுகாதார மற்றும் வதியும் சூழல் முன்னேற்ற திட்டத்தை சமூக அபிவிருத்தி மன்றம் சுமார் 8 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் முன்னெடுக்கவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 3 தோட்டங்கள் மற்றும் 2 பாடசாலைகளுக்கு குடிநீர் திட்டம் மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதன் மூலம் இந்த பகுதிகளின் சுகாதார மற்றும் வதியும் சூழல் முன்னேற்றப்படும்.

ஜப்பானிய அரசாங்கமானது தனது உதவிகள் மூலம் சமாதானம் மற்றும் மீள் கட்டுமானத்தை நிலைநிறுத்தவும் நடுத்தர மற்றும் நீண்ட கால அபிவிருத்தியை நோக்காக கொண்டும் பலவேறு விவசாய, மீன்பிடி அபிவிருத்தி திட்டங்களை வடக்கு மற்றும் கிழக்கிலும் செயற்படுத்தி வருகிறது.

மேல்கொத்மலை செயற்திட்டம் மற்றும் யாழ்ப்பாண வைத்தியசாலை மேம்படுத்தல் திட்டம் போன்றன பாரிய திட்டங்களாகவும் சிறிய திட்டங்கள் GGP முறையின் கீழும் செயற்படுத்தப்படுகிறது.

புபீ திட்டங்களின் மூலம் குறுகிய காலத்தில் நேரடியான பயனை மக்கள் பெற்றுக் கொள்கிறார்கள். மேற்குறிப்பிட்ட 2 GGP திட்டங்கள் அடங்கலாக ஜப்பானிய அரசாங்கமானது 2010க்கான நிதியாண்டில் சுமார் 190 மில்லியன் ரூபா பெறுமதியான செயற்திட்டங்களை செயற்படுத்தியிருக்கிறது.